www.Padasalai.Net. www.Trb Tnpsc.com of 2.

V11T

விருதுநகர் மாவட்டம்
முதல் திருப்புதல் பொதுத் தேர்வு - 2024

வகுப்பு - 11

நேரம் : 3.00 மணி | தமிழ் | மதிப்பெண் : 90

அறிவுரைகள் : 1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக் கோடிடுவதற்கும் பயன்படுத்தவும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

பகுதி - I

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14 x 1 = 14
ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. பாயிரம் இல்லது ---------- அன்றே.
அ) பாடல் ஆ) காவியம் இ) பனுவல் ஈ) கவிதை

2. புதுக்கவிதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர் ------------------
அ) ஸ்டெஃபான் மல்லார்மே ஆ) பாப்லோ நெருடா
இ) இந்திரன் ஈ) வால்ட் விட்மன்

3. "இனிதென" - இச்சொல்லில் அமைந்த புணர்ச்சி விதிகள் :
அ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவ தியல்பே, தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்.
ஆ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.
இ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், முற்றுமற்று ஒரோ வழி.
ஈ) தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்.

4. ஒப்புரவு என்பதன் பொருள் -------
அ) ஊருக்கு உதவுவது ஆ) அடக்கமுடையது
இ) செல்வமுடையது ஈ) பண்புடையது

5. பொருத்தி விடை தேர்க

| | | |
|---|---|---|
| 1) வெள்ளிவீதியார் | - | அ) புறநானூறு |
| 2) அண்ணாமலையார் | - | ஆ) சி.சு.செல்லப்பா |
| 3) வாடிவாசல் | - | இ) குறுந்தொகை |
| 4) இளம்பெருவழுதி | - | ஈ) காவடிச்சிந்து |

i) அ ஆ இ ஈ ii) ஆ ஈ அ இ iii) இ ஈ ஆ அ iv) இ ஈ அ ஆ

6. சீறாப்புராணத்தின் ஆசிரியர் -------------
அ) சீதக்காதி ஆ) உமறுப்புலவர் இ) கம்பர் ஈ) அம்மூவனார்

7. பள்ளு எவ்வகையான சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று?
அ) 76 ஆ) 86 இ) 96 ஈ) 99

8. வேடம் போட்டவன் வேடதாரி பட்டம் வாங்கினவன் ---- ?
அ) உளவாளி ஆ) பட்டதாரி (இ) வருமானம் (ஈ) விமானி

9. திராவிடர்களை மலைநிலை மனிதர்கள் என்று அழைத்தவர் -----------
அ) பேராசிரியர் ஜார்ஜ் எஸ் ஹார்ட் ஆ) கமில் சுவலபில்
(இ) ஜி.யு.போப் (ஈ) இராபர்ட் கால்டுவெல்

10. தவறான இணையைத் தேர்வு செய்க
அ) தமிழ் + உணர்வு - மெய் + உயிர் ஆ) மொழி + ஆளுமை - உயிர் + உயிர்
(இ) மண் + வளம் - மெய் + மெய் (ஈ) கடல் + அலை - உயிர் + மெய்

kindly send me your key answer to our email id - Padasalai.net@gmail.com of 2.

www.Padasalai.Net. www.Trb Tnpsc.com of 2.

11. பெண்கள் விளையாடும் விளையாட்டுகளுள் ஒன்று ------------

அ) சிறுதேர் ஆ) சாழல் இ) சிறுபறை ஈ) சிற்றில்

12. மாநகர் என்பதன் இலக்கணக்குறிப்பு

அ) எண்ணும்மை ஆ) முற்றும்மை இ) உரிச்சொற்றொடர் ஈ) தொழிற்பெயர்

13. 2011 - ஆம் ஆண்டுகணினிப் பாடப்பிரிவு இளநிலைப் பட்டப்படிப்பில் முதல் வகுப்பில் தேர்ச்சிபெற்ற திருநங்கை ----------

அ) ஜோயிதா மோண்டல் மாகி ஆ) செவ்வி நர்த்தகி நடராஜ்

இ) தாரிகா பானு ஈ) பிரித்திகா யாஷினி

14. Book Review என்பதன் கலைச்சொல்:

அ) புத்தக மதிப்புரை ஆ) ஏடு இ) பாடநூல் மதிப்புரை ஈ) புத்தகம் பார்த்தல்

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** 3 x 2 = 6

15. கண்காணி - குறிப்பு தருக.
16. ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள - இவ்வடி எதனை உணர்த்துகிறது?
17. சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை?
18. செந்தூக்கு - விளக்கம் தருக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2 x 2 = 4

19. பேச்சுமொழி, எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?
20. மலை, குன்று இவற்றின் பொருள் வேறுபாடு யாது?
21. "நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்" - என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக.** 7 x 2 = 14

22. உயிர்முதல், மெய்ம்முதல் - எடுத்துக்காட்டுடன் விவரிக்கவும்.
23. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
    அ) செங்கயல் ஆ) புகழெனின்
24. இரண்டனுக்கும் இலக்கணக் குறிப்பு தருக.
    அ) உண்டல் ஆ) பொற்சிலம்பு
25. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
    அ) மெலிந்து ஆ) மருண்டெனன்
26. பேச்சு வழக்குகளை எழுத்து வழக்குகளாக மாற்றுக.
    அ) தேர்வெழுத வேகமாப் போங்க, நேரங்கழிச்சுப் போனாப் பதட்டமாயிடும்
    ஆ) அப்பசி அடமழையில் ஊருணி நிறைந்தது
27. பின்வரும் மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
    கனை, கணை

kindly send me your key answer to our email id - Padasalai.net@gmail.com of 2.

www.Padasalai.Net. www.Trb Tnpsc.com of 2.

28 சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.

தங்கை

29 ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க்கலைச் சொற்களை எழுதுக.

அ) Emotion ஆ) Mass Drill

- 3 -

30 மெய்ப்புத் திருத்தக் குறியீடுகளுக்கு உரிய விளக்கம் தருக.

அ) Dt ஆ) \/"

பகுதி - III

பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2 x 4 = 8

31. "சலச வாவியில் செங்கயல் பாயும்" - இடம்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

32. காற்றிலாடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?

33. மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை?

34. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?

பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2 x 4 = 8

35. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.

36. "சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும்" குறிப்பு வரைக.

37. ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு வெளிப்படுத்தும் சமுதாயச் செய்திகள் யாவை?

38. ஃபிரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?

பிரிவு - 3


**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** 3 x 4 = 12

39. சொற்பொருள் பின்வருநிலை அணியை விளக்குக. **அல்லது**

**இளைதாக முள்மரம் கொல்க களையுநர்**
**கைகொல்வலும் காழ்த்த விடத்து.** - இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.

40. மெய்ப்புத் திருத்துநர் பணிவேண்டி நாளிதழ் முதன்மையாசிரியருக்கு உரிய விவரங்களுடன் தன்விவரக் குறிப்பு ஒன்று எழுதுக.

41. வேர்ச்சொல், எதிர்மறை இடைநிலை, விகுதி ஆகியவற்றைச் சேர்த்துச் சொற்களை உருவாக்குக.




42. தற்போதைய உணவுமுறை நல்வாழ்வை வளர்க்கிறது / குறைக்கிறது - நும் கருத்தை எழுதுக.

kindly send me your key answer to our email id - Padasalai.net@gmail.com of 2.

43. தமிழாக்கம் தருக.

www.Padasalai.Net. www.Trb Tnpsc.com

1. The pen is mightier than the sword
2. A picture is worth thousand words
3. Work while you work and play while you play
4. Knowledge rules the world

**மாற்றுவினா (காது கேளாதவர்களுக்கானது)** - பத்திகளைப் படித்து வினாக்களுக்கேற்ப விடையளிக்கவும்.

தமிழ்ப் பதிப்புலகின் தலைமகன் என்று போற்றப்படும் சி.வை.தாமோதரனார் இலங்கை யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். தமிழ் நாட்டிற்கு வருகைபுரிந்து, தம் இருபதாவது வயதிலேயே "நீதிநெறி விளக்கம்" என்னும் நூலை உரையுடன் பதிப்பித்து வெளியிட்டு, அறிஞர்களின் கவனத்தைக் கவர்ந்தார். 1868 ஆம் ஆண்டு, தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்குச் சேனாவரையர் உரையையும், பின்னர் கலித்தொகை, இறையனார் அகப்பொருள், வீரசோழியம் உள்ளிட்ட பல நூல்களையும் செம்மையாகப் பதிப்பித்துப் புகழ்கொண்டார். அத்துடன் நில்லாது கட்டளைக்கலித்துறை, நட்சத்திரமாலை, சூளாமணி வசனம் ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார்.

பெர்சிவல் பாதிரியார் அவரை, தாம் நடத்திய "தினவர்த்தமானி" என்னும் இதழுக்கு ஆசிரியராக்கினார். அரசாங்கத்தாரால் சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராக நியமிக்கப்பட்டார். 1884 - ஆம் ஆண்டிர் புதுக்கோட்டை உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

1. தமிழ்ப்பதிப்பு உலகின் தலைமகன் என்று போற்றப்பட்டவர் யார்?
2. தினவர்த்தமானி என்னும் இதழை நடத்தியவர் யார்?
3. கல்லூரி, உயர்நீதிமன்றம், வரலாறு ஆகியவற்றிற்குப் பொருத்தமான ஆங்கிலச் சொற்களை எழுதுக.
4. அறிஞர்களின் கவனத்தைக் கவர அவர் ஆற்றிய பணி யாது?

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 3 x 6 = 18

44. அ) வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீவிர் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக **(அல்லது)**

ஆ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்கவும்.

45. அ) சுந்தர ராமசாமியின் "காற்றில் கலந்த பேரோசை" என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக **(அல்லது)**

ஆ) இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்களின் இருப்பிடப் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன எனும் கூற்றை மெய்ப்பிக்கவும்.

46. அ) வாடிவாசல் கதை வாயிலாக நீவிர் உணர்ந்த கருத்துகளை விளக்குக **(அல்லது)**

ஆ) சிம்பொனித் தமிழரும், ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்து எழுதுக

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 4 + 2 = 6

அ) 'சிறகிலிருந்து ... எனத் தொடங்கும் காவியம் பாடலை எழுதுக

ஆ) "... இலன் - என முடியும் குறட்பாவை எழுதுக

---

kindly send me your key answer to our email id - Padasalai.net@gmail.com